**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 316/2022</u>**
**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேக் பாசில் உசைன் | தாலுகா | : | திருநெல்வேலி |
| தந்தை பெயர் | : | சேக் தாவுத் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | சுத்தமல்லி | வயது | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 30th, 2025.

**(1மற்றும் 2ம் எதிரி ஆஜரில்லை. 1மற்றும் 2ம் எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் சேரன்மகாதேவி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். நான் அச்சன்புதூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, 04.08.2015ம் தேதி, காலை 06.00 மணியளவில் அச்சன்புதூர் - காசிதர்மம் ரோட்டில் சின்னக்காடு விலக்கு பக்கம் ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக காவலர்கள் ராஜேந்திரன், பெருமாள் ஆகியோர்களுடன் ரோந்து செய்து வரும் போது காசிதர்மம் ரோட்டிலிருந்து கிழக்கிலிருந்து மேற்காக 2 மோட்டார் சைக்கிள்களில் பின்னால் ஊர், பெயர் கேட்டு தெரிந்து கொண்ட எதிரிகள் வந்து கொண்டிருந்தார்கள். ஒரு மோட்டார் சைக்கிள் TN-76-M-1473 பஜாஜ் டிஸ்கவரில் எதிரிகள்

பிச்சைக்கனி, மதிச்செல்வம், பால்பாண்டி ஆகியோர்கள் இருந்தார்கள். இன்னொரு மோட்டார் சைக்கிள் TN-76-Q-7106 ல் டி.வி.எஸ் போனிக்ஸ்-ல் சந்தனபாண்டி, சங்கர், இசக்கித்துரை ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்கள் போலீஸ் பார்ட்டியை பார்த்தவுடன் திரும்பி போக முயற்சி செய்தார்கள். அவர்களை மடக்கி பிடித்தபோது, பிச்சைக்கனி, மதிச்செல்வம், பால்பாண்டி, இசக்கித்துரை ஆகியோர்களை பிடிக்க முடிந்தது. சந்தனபாண்டியும், சங்கரும் டிவிஎஸ் போனிக்ஸ் பைக்கை எடுத்து கொண்டு ஓடி விட்டார்கள். பிடிப்பட்ட 4 பேரையும் விசாரித்தபோது, மதிச்செல்வம் மடியில் வைத்திருந்த சாக்குபையை திறந்து பார்க்கும் போது, அதில் SPBL என்ற நாட்டு துப்பாக்கி ஒன்று இருந்தது. அந்த பக்கமாக வந்த அச்சன்புதூர் மீரான்கனி, மாடசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி மதிச்செல்வம் அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்பு நெடுவயல் கிராமத்தை சேர்ந்த முத்துராஜ் என்பவரிடம் கள்ளத்துப்பாக்கி வாங்கி அதனை அவருடைய சித்தப்பா பிச்சைக்கனி என்பவருக்கு கொடுத்து, அவர் காவல் காத்து வந்த ராதாகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான தென்னந்தோப்பில் மறைத்து வைத்திருந்ததாகவும், துப்பாக்கி வெடிப்பதற்காக தோட்டாக்களை மலை அடிவாரத்தில் பொறுக்கி எடுத்து, அதில் மூலப்பொருட்களை அடைத்து, அதே தோட்டத்தில் மறைத்து வைத்திருந்ததாகவும், எப்போதாவது மான் வேட்டையாட அந்த துப்பாக்கி, தோட்டாக்களுடன் செல்வதாகவும், அன்று அதிகாலை காசிதர்மத்திற்கு கிழக்கே மான் வேட்டையாட சென்றதாகவும், அங்கு எதுவும் கிடைக்காததால் சின்னக்காட்டு பக்கம் மலையடிவாரத்திற்கு வேட்டையாட சென்றால் மான் ஏதாவது கிடைக்கும்

என்றும், அந்த சமயத்தில் காவல்துறையினரிடம் மாட்டிக் கொண்டதாகவும், உடன் இருந்த பிச்சைக்கனி, பால்பாண்டி, இசக்கித்துரை ஆகியோர்களிடம் ஆளுக்கு ஒவ்வொருவரிடம் தலா ஒரு தோட்டா இருப்பதாகவும், மீதமிருந்த தோட்டாக்களை சந்தனபாண்டியும், சங்கரும் கொண்டு சென்றதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மதிச்செல்வத்திடம் ஒரு துப்பாக்கி மற்றும் வெள்ளைச் சாக்கு பையும், மற்ற எதிரிகளான பிச்சைக்கனி, பால்பாண்டி, இசக்கித்துரை ஆகியோர்களிடம் இருந்த தோட்டாக்களும் அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், சிறப்பு உதவியாளர் ராஜேந்திரனும், 2 தனிநபர் சாட்சிகளும் கையெழுத்து செய்தோம். எதிரிகள் மற்றும் சொத்துக்களை நிலையம் கொண்டு வர ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ரைடு போவதற்கு ஒரு நாள் முன்பிலிருந்து காவல்நிலைய பணியில் இருந்ததாக நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எந்த வாகனத்தில் ரோந்திற்கு சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் தென்வடல் ரோடு என்றால் சரியல்ல. கிழமேல் ரோடாகும். நாங்கள் வடபுறம் நின்றோமா? தென்புறம் நின்றோமா? என்று குறிப்பிட்டு ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. எதிரிகள் கிழக்கிலிருந்து மேற்காக வரும்போது எவ்வளவு தூரத்தில் இருந்து நாங்கள் அவர்களை பார்த்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. எங்கள் குழுவில் இருந்த போலீசாரில் யார், யார் எந்தெந்த எதிரியை மடக்கி

பிடித்தார் என்று குறிப்பிட்டு நான் ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். எவ்வளவு தூரம் விரட்டி சென்று மடக்கி பிடித்தோம் என்றால் அந்த இடத்திலேயே பிடித்தோம். ஆய்வாளர் கையில் துப்பாக்கி இருந்ததா? என்றால் எனக்கு ஞாபகமில்லை. எதிரிகளை சம்பவயிடத்திலேயே வைத்து கைது செய்தோம் என்றால் சரிதான். அன்றைய தினம் நான் ரோந்து பணி செய்ததாக பொதுநாட்குறிப்பு மற்றும் பாக்கெட் டைரியில் துலங்கும் என்றால் சரிதான். துப்பாக்கியின் அளவு எனக்கு தெரியும். சம்பவம் குறித்து வனத்துறை ஆய்வாளருக்கு தகவல் சொன்னோமா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் இடையே ஒரு கி.மீ தூரம் உள்ளது. துப்பாக்கியின் முந்தைய உரிமையாளரை ஆய்வாளர் விசாரித்தாரா? என்றால் அது எனக்கு தெரியாது. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை எங்கு வைத்து கைப்பற்றப்பட்டது என ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை கைப்பட யார் எழுதினார்கள் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் எழுதினார். நான் இந்த விபரத்தை ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் அவரும் இருந்தார். ரோந்து செல்லும் போது துப்பாக்கியை ஆய்வாளர் உடன் எடுத்து செல்வாரா? என்றால் அது எனக்கு தெரியாது. நான் ஆய்வாளருடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாள் நான் ரோந்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலைய புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரிகளை காவல்நிலையத்திற்கு வரவழைத்து, வழக்கு சொத்துக்களை பின்னர் காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்து தயாரித்த ஆவணங்களில் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்து விட்டு,

அதற்கு ஏற்றாற்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், வழக்கு சொத்துக்கள் அனைத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.31 19:17:43 +0530